விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii








E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 312 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 09 சனிக்கிழமை (26.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


### மட்டக்களப்பு நீதிமன்றில்

## குண்டுத் தாக்குதல்

### நடத்தப்படும் என எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என பதிவுத் தபாலில் கிடைத்த கடிதம் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்திற்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற்று 15


### தொடர் மழை

## யாழில் 60 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாகப் பெய்யும் மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் அனர்த்த முகாமைத்துவ 15

## மின்சாரம் தாக்கியதில் தொடர் சுகவீனம்



### கரவெட்டியில் இளைஞன் மரணம்

(கரணவாய்)

மின்சாரம் தாக்கியதில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக அடிக்கடி சுகவீனமுற்ற இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் கரவெட்டி கப்பூது பகுதியைச் சேர்ந்த மகேந்திரம் 15

### நாட்டின் பல பகுதிகளில்

# தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ

(கொழும்பு)

**அறுகம்பே உட்பட நாட்டின் பல பகுதிகளில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறுகம்பே உட்பட நாட்டின் பல பகுதிகளில் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் 15

### அரிசி விலை தொடர்பான

## சிக்கலை தீர்க்குக

### ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

அரிசி விலை தொடர்பான சிக்கலைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து விவசாய அமைச்சு மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் 15

### 29ஆம் திகதி வரை

## வடக்கில் மழை தொடர வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 29ஆம் திகதி வரை வட மாகாணத்தில் மழை தொடர வாய்ப்புள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். 15

## தமிழர்களின் அரசியல் அபிலாசைகள்; இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை

### ஜனாதிபதி அநுரவுடன் டக்ளஸ் கலந்துரையாடல்

(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 15



## பருத்தித்துறையில் இளைஞன் சுகவீனத்தால் மரணம்

### பிரிவைத் தாங்க முடியாமல் மனைவி உயிர்மாய்க்க முயற்சி


(பருத்தித்துறை)

வடமராட்சி பருத்தித்துறையில் திருமணமாகி ஒரு வருடத்தில் கணவன் உயிரிழந்த நிலையில், மனைவி உயிரை மாய்க்க முயற்சித்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் புலோலி தென் மேற்கு, பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த சிவனேஸ்வரன் சிறிராஜ் 15

## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### தேர்தல் விளம்பரம் ஒட்டியபோது முல்லைத்தீவில் சம்பவம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்து விநாயகபுரம் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 15

## பாதுகாப்பான நிலையில் இலங்கை

### ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் அநுர

(கொழும்பு)

இலங்கை தற்போது பாதுகாப்பான நிலையில் காணப்படுவதாக ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ தலைமையிலான 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08 - 05 - 1948 | 24 - 10 - 2024 |

### சிவசுப்பிரமணியம் பத்மாவதி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் பத்மாவதி அவர்கள் 24.10.2024 வியாழக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் வல்லிபுரம் - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோதிமலர், ரமேஸ் மற்றும் விமலநாதன், சுரேஸ், ஜீவமலர், கோனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராதிகா, கலாவதி, தயாளன், ரேனுகா ஆகியோரின் பாசமிகு மாமியும் விதுர்சன், நிருஜன், லக்சிகா, தேனுஜன், வர்ணிகா, தர்மிதன், துவிஸ்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2024) ஞாயிற்றுக் கிழமை உடுப்பிட்டியில் உள்ள அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 03.00 மணிக்கு வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கோனேஸ்வரன் (மகன்)
077 1752 611

(C-1455)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடியில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்**

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை.

**070 168 3354, 070 668 3354**

(2503)


## 9 ஆம் ஆண்டு நிறைவில் உம் நினைவுகள் சுமந்து...

### திருமதி நிகிலா சுதர்சன்



திதி:அபரபக்க நவமி- 26.10.2024

பேசுமொழியையும் பிறந்த மண்ணையும்
தாய்மொழி தாய்மண்ணென அழைத்திடுவர்
அத்துணை உன்னதமானது தாய்மை
எம்மொழியும் பெருமிதம்கொள்ளும்
அம்மா என்ற சொல்லை கொண்டிருக்க
மழை வெயில் எமைத்தீண்டவிடாமல்
சிட்டாய்ப்பறந்து எமக்கு கல்வியளித்து
எம் வாழ்வுக்கு அடித்தளமிட்டாய்
இளந்தளிர்கள் நாம் முதிரும் முன் விடைபெற்றாய்
தேநீர் தந்து எமை எழுப்பும்
அதிகாலையில் விழி நனையவைத்தாய்
எம்மீது கண்ட கனவுகள் நனவாகுமுன்
எம் நினைவுகளில் சேர்ந்தாய்
உம்மகமிருந்து இவ்வுலகறியத்தொடங்கினோம்
எம் அகத்தில் உம் நினைவுகள் சுமந்து
உம்மாசைகள் நிறைவேற்றிடுவோம்...


| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.04.1971 | 05.11.2015 |

இல. 27/14,
1 ஆம் ஒழுங்கை, ஈச்சமோட்டை.

நீங்கா நினைவுகளுடன்
**கணவர், பிள்ளைகள்**

(478)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி இராசகோபாலன்
#### (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

கரவெட்டி கிழக்கு கிழவிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசகோபாலன் அவர்கள் 23.10.2024 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் லஷ்சுமி (சின்னமணி) தம்பதியரின் அன்பு மருமகனும் சிவநேசம் அவர்களின் அன்புக் கணவரும் கோகுலராம் அவர்களின் பாசமிகு தந்தையும் இராசநாயகம் (ஓய்வு பெற்ற அதிபர்), இராசமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற செல்லையா ஜெயராசா, நடராசா (ஓய்வு நிலை அதிபர்), செல்வராசா (ஓய்வு பெற்ற ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர்), தங்கராசா (ஓய்வு பெற்ற பிரதேச சபை உத்தியோகத்தர்), சிவராசா (கனடா), தவராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் கிரிசாந்தி, ஜெயபிரகாஷ், மோர்சிபவன், மேனகா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் தேவமாலினி, மோகனராஜ், கோபாலநந்தினி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கிழவிதோட்ட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(479)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 - 08 - 1943 | 25 - 10 - 2024 |

### நாகலிங்கம் சிவலிங்கம்

கோண்டாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப் பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவ்லிங்கம் அவர்கள் 25.10.2024 நேற்று வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசையா - லக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் லலிதா அவர்களின் அன்புக் கணவரும் கமலாதேவி, சறோஜினிதேவி, பவளம் ஆகியோரின் உடன் பிறந்த அன்புச் சகோதரனும் இந்திரா, சந்திரா, சாரதா, சவுந்தலா ஆகியோரின் அண்ணனும் பரமநாதன், தம்பிப்பிள்ளை, சிவநேசன் (சிவம் சைக்கிள் கடை), யோகானந்தன், லோகநாதன், தவமணி, புஸ்பம், கலாநிதி, தயாநிதி, இராஜகுமார் காலஞ்சென்றவர்களான ரகு, பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.11.2024 அன்று பிரான்ஸில் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] நிலைய வீதி,
கோண்டாவில்.

தகவல்:
சிவம்(கோண்டாவில்)
077 6482 033

(2502)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மீதான வன்முறை;

# 5 வருட சிறைத்தண்டனை!

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

(கொழும்பு)

**பேருந்துகளில் பயணிக்கும் சிறுமிகளை தகாத முறைக்கு உட்படுத்துபவர்களுக்கு எதிராக 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.**

பேருந்துகளில் பயணிக்கும் பெண்களில் 80 வீதமானவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அதிகாரசபையில் நேற்று இடம்பெற்ற செயலமர்வில் பணிப்பாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோரின் குடும்பத் தகராறுகள் குழந்தைகளை கடுமையாகப் பாதிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அந்தரங்க புகைப்படங்களை உருவாக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இதற்கு தண்டனைச் சட்டத்தின் 286ஆவது பிரிவின்படி, 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வைத்திருப்பது சட்டப்படி குற்றமாகும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (நி-8)

# ஜோன்ஸ்டனை சந்திக்க சிறை சென்ற மகிந்த



(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை பார்வையிடுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடந்த புதன்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.


இந் நிலையில் நேற்று மகிந்த ராஜபக்ச அவரை சந்திக்க சென்றுள்ளார். (நி-8)

# 5 நாட்கள் 'சசிரி' சீட்டிழுப்பு

(கொழும்பு)

நவம்பர் மாதம் முதல் வாரத்தில் ஐந்து நாட்களும் 'சசிரி' லொத்தர் சீட்டிழுப்பினை நடத்த அபிவிருத்தி லொத்தர் சபை தீர்மானித்துள்ளது.

இதுவரை 3 நாட்கள் மட்டும் இச் சீட்டிழுப்பு நடைபெற்று வந்த நிலையில் அடுத்த மாதம் முதல் செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சீட்டிழுப்பு நடைபெறும். (நி-8)




# மின்கட்டண குறைப்பிற்கான யோசனை சமர்ப்பிப்பு

## இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கான யோசனை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ஆணைக்குழு முன்மொழிவை பரிசீலித்து ஒப்புதல் அளித்த பின்னர் மின் கட்டண குறைப்பு தொடர்பான சதவீதம் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்சார சபை மூன்றாவது முன்மொழிவை சமர்ப்பித்துள்ளது.

மேலும் மக்களுக்கு கூடுதல் நிவாரணம் அளிக்கக்கூடிய மின் கட்டண முறையை அறிமுகம் செய்யும் நோக்கில் விலைச் சூத்திரம் மீளாய்வு செய்யப்படுவதாக மின்சக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## கனகசபை கந்தசாமி

**(ஓய்வுபெற்ற படவரைஞர் - கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)**



காரைநகரைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கனகசபை கந்தசாமி அவர்கள் நேற்று (25.10.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா (மணியம் மாஸ்டர்) - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பவானியின் அன்புக் கணவரும் சயந்தன் (ஆசிரியர் - யா/வேம்படி மகளிர் கல்லூரி), கௌரி (UK), பிருந்தா (ஆசிரியை - யா/ஸ்ரீபார்வதி வித்தியாலயம், அரியாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிருந்தாமலர் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), கலாநிதி ஜனார்த்தனன் (UK), உமாசெல்வன் (Project Manager IT) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஸ்ரீஹரி, ஹனுஸ்ஹரி, அபிராமி, மீனாட்சி, அட்சரன், ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் வரதராசா, சிவபாலசிங்கம் (துரை), நாகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் வள்ளிநாயகி, கோசலாதேவி, தவளாம்பிகை, காலஞ்சென்ற தவராசா, சறோஜா, சிவராஜா, யோகராணி, சாந்தினி, திருலோசினி, ஆனந்தராஜா, அருளேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

40/3, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(2504)

தகவல் :
குடும்பத்தினர்

# அல் நஸர் அணியில் இருப்பதில் பெருமிதம்

## கிறிஸ்ரியோனோ றொனால்டோ




கிறிஸ்ரியானோ றொனால்டோ அவர் தனது எக்ஸ் பதிவில் அல் நஸர் அணிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள். இந்த குடும்பத்தில் ஒருவனாக இருப்பதில் பெருமை கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

அல் நஸர் அணி 1955 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதனால் 69 ஆண்டு களைக் கடந்த தமது அணிக்கு றொனால்டோ இந்த வாழ்த் தினை கூறியுள்ளார்.

கால்பந்து ஜாம்பவான் கிறிஸ் ரியானோ றொனால்டோ 2022 ஆம் ஆண்டில் சவுதி கிளப் அணியான அல் நஸரில் இணைந்தார்.

அல் நஸர் அணிக்காக 80 போட்டி களில் விளை யாடி 72 கோல்கள் அடித்துள்ளார். றொனால்டோவின் வருகைக்கு பின் அல் நஸர் அணி பாரியளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. அத்துடன் உல களவில் பிரபலமான கிளப் ஆகவும் அல் நஸர் புகழ்பெற்றுள்ளது.

கடந்த 22ஆம் திகதி நடந்த Esteghlal F.C அணிக்கு எதிரான போட்டியில் அல் நஸர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3247

### மதுஷன்




### சாரதா




### மயூரி




### தினேஷ்




### பவித்ரா




### நயனிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா



(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்திய பண்பாட்டு பெருவிழா வானது நேற்று முன்தினம் சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

சங்கானை பேருந்து நிலையத்திலிருந்து விருந்தினர்கள் பாரம்பரிய பொம்மலாட்டம், குதிரையாட்டம், இன்னியம் ஆகியவற்றின் அணி வகுப்புடன் கலாசார மத்திய நிலையம் வரை அழைத்து வரப்பட்டனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் நடைபெற்ற பண்பாட்டுப் பெருவிழா வில், பிரதம அதிதியாக யாழ.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து சிறப்பித்ததுடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பொது மக்கள் என பலரும் இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டனர். (நி-8)


**வைத்தியம்**

வலிப்பு நோய் | கை விறைப்பு |
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(2303)

## பாராளுமன்றத் தேர்தல்-2024
### யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

**களத்தில் கமல்...**

**1. தலைமைத்துவம்**

- கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின்
  - தலைவர் - 2014/15
  - உபதலைவர் - 2012/13
- இலங்கை சட்ட மாணவர் சங்கம்
  - உபதலைவர் - 2015/16
- கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் மற்றும் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கல்வி தொடர்பான பாசறைகளில் தொடர்ந்து பங்காற்றியமை.
- சர்வதேச நிறுவனத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் பாடசாலைகளின் அபிவிருத்தி செயல்திட்டங்களுக்கு ஆலோசகராக செயற்பட்டமை.
- பல்வேறு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்காக, சர்வதேச நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட, 6 மாத கால தலைமைத்துவப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றமை.

**2. முயற்சியாண்மை**

- YAARL FITNESS - 2016 (யாழ் உடற்பயிற்சி நிலையம்)
- YAARL HOSTELS - 2018 (யாழ் சுற்றுலா விடுதி)
- SINGAI RESTAURANT - 2024 (சிங்கை உணவகம்)

**3. கல்வி**


- Attorney - at - law இலங்கைச் சட்டக் கல்லூரி
- LL.B (Hons) - APIIT, கொழும்பு
- B.A (Economics) - கொழும்புப் பல்கலைக்கழகம் (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், சர்வதேச உறவுகள்)
- க.பொ.த உயர் தரம் - கொழும்பு இந்துக்கல்லூரி (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞானமுறையும்)
- க.பொ.த சாதாரண தரம் வரை - யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி

**4. விளையாட்டு**

- உதை பந்தாட்டம்
  - கொழும்புப் பல்கலைக்கழக அணியின் உபதலைவர் - 2014/15
  - இலங்கைப் பல்கலைக்கழக (SLUSA) Colours விருது - 2012, 2013, 2014
- படகோட்டம் (Rowing)
  - கொழும்புப் பல்கலைக்கழக Colours விருது - 2013
- பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் சகலதுறை விளையாட்டு வீரராகத் திகழ்ந்தமை.

**5. கலைத்துறை - இயக்குனர்**

- குறும்படம் - " அக (தீ) ", " பட்டம் 2 பட்டம் "
- பாடல்கள் - " கனவா நனவா... ", " ஷண்முக நாமமே... ", " மூத்த மொழியின் முதல்வன்... "














**சுயேச்சைக் குழு - 2**

ஊஞ்சல் சின்னம்



4

**E.S.P நாகரத்தினம் கமலரூபன்**
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

மாற்றத்திற்கான நம்பிக்கை...



(D12)


# இராசிபலன்

26.10. 2024
ஐப்பசி 09, சனிக்கிழமை
நவமி முற்பகல் 7.47 மணிவரை

ஆயில்யம் பிற்பகல் 2.17 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

**வளவன்**

**மேஷம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** பூர்வீகம் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் மூலம் சுப செய்திகளைப் பெறுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி:** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் கிடைக்கலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சேமிப்பு உயரும் நாள்.

**தனுசு:** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மகரம்:** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள்.

**கடனுக்கு வாங்கி ரொக்கத்திற்கு விற்பவன் அறிவாளி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்சங்கர் வழங்கிய நூல் வடக்கு ஆளுநரிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரினால் கையளிக்கப்பட்ட நூல் ஒன்று யாழ். இந்திய துணைத் தூதுவரால் வடமாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

"ஒரு சிறந்த நாளைக்கான பிணைப்புகளை வலுப்படுத்துதல்" என்னும் ஹிந்தி மொழியில் உருவாக்கப்பட்ட நூல், தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மருதடி வீதியில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்தமிழ்மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூலினை இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியிடம் இருந்து பிரதம அதிதியாக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பெற்றுக் கொண்டார். (6-8)

# 125 ஆவது ஜெயந்தி தினமும் ஆய்வுக் கட்டுரைகள் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 125 ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை "எஸ். ஜே.வி. செல்வநாயகமும் தமிழ் தேசிய வாதமும்" எனும் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீடும் இன்று இடம் பெறும்.

காலை 9 மணிக்கு யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறும் இந்நிகழ்வில் தலைமை அதிதியாக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் 17 கட்டுரைகள் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## சிறி நாக விகாரையில் கட்டின புண்ணிய பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறி நாக விகாரை வணக்க ஸ்தலத்தில் வருடாந்தம் நடத்தி வருகின்ற கட்டின புண்ணிய பூஜையானது இன்றும் நாளையும் யாழ்.சிறி நாக விகாரையில் இடம்பெறவுள்ளது.

இந்த புண்ணிய பூஜையானது யாழ்ப்பாண பாதுகாப்புப் படை கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து மதங்களின் தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (6-8)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

முரளிக்கிஷ்ண ஞாப கார்த்த திருநாவுக்கரசு சன சமூக நிலையத்தின் 36 ஆவது ஆண்டுவிழாவினை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவுடன் இணைந்து நடத்தும் இரத்த தான முகாம்இன்று இடம்பெறும்.

காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சன சமூக நிலையம் பாண்டவெட்டை, சுழிபுரம் மண்டபத்தில் இடம்பெறும்.

எனவே குருதிக் கொடையாளர்களை குறித்த இரத்த தான முகாமில் கலந்து கொண்டு குருதித்தானம் செய்யுமாறு ஏற்பாட்டாளர் கள் அறிவித்துள்ளனர். (6-8)

# சான்றுப் பொருட்கள் உரிமை கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்ற வழக்கான AR/ 979/ 24 இல் யாழ். பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருளான குவாவி வகையைச் சார்ந்த இமி இல 86633104 7378 445 அத்துடன் 866331048278 446 இலக்க கைத் தொலைபேசியினுடைய உரிமையாளர் இருப்பின் தகுந்த சான்றுகளுடன் நீதிவான் நீதி மன்ற அலுவலகத்திற்கு வருகை தரவும் என யாழ். நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் அறிவுத் திருக்கோவி லில் இந்த வாரத்திற்கான மன வளக் கலைப்பயிற்சிகள் அறி முக வுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக் கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள் சித்தர்களின் காயகல்ப பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மன வளக்கலை பேராசிரியர் க. செல்வகுமார் வழங்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்-யாழ் கிளை நடாத்தும்
பரிசளிப்பும் கலை நிகழ்வும்
அழைப்பிதழ்

இடம்: இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி,
கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
காலம்: 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி

தலைமை
திரு.ந.சோதிநாதன்
(ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

பிரதம விருந்தினர்
உயர்திரு.திருமதி.நந்தகோபாலன் சாந்தி தம்பதியினர்
(கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்
செல்வி.றஞ்சனா நவரத்தினம்
(பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், காரைநகர்)
காரை. திரு.இ.குருபரன்
(சிரேஷ்ட உதவிச் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம்)

துறைசார் விருந்தினர்
காரை. ஸ்ரீமதி.மாலதி சிவகுமார்
(முன்னாள் இயக்குநர், நடேஸ்வராலய நுண்கலைக் கல்லூரி, கொழும்பு)

கௌரவ விருந்தினர்கள்
"கலைமாடக்கோன்"
திரு.திருமதி.சிவஞானம் உமாதேவி தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம்)
"தேசமான்ய விஸ்வகீர்த்தி"
லயன் திரு.திருமதி. சதீஸ்குமார் சியாமளா தம்பதியினா
(முகாமையாளர்,மலாயன் கபே, யாழ்ப்பாணம்)



நிகழ்ச்சி நிரல்
- கலாமன்ற ஆசிரியர் கௌரவிப்பு
- நடுவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்தல்
- மாணவர்கள்,பெற்றோர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தல்
- கலாமன்ற மாணவர்களின் கலைநிகழ்வுகள்
- "இசைக்கச்சேரி"

"சிறப்பு நிகழ்வு"
"கிழவன்காடு கலாமன்றக் குழுமம்"
பெருமையுடன் வழங்கும்
"சிறப்பு நாடகம்"
"வாய்மையே மேன்மை"
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(c-1451)

குறிப்பு-இந் நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை காரைநகர் கிளையிலிருந்து பி.ப 1.15 மணிக்கு ஆரம்பமாகும்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர் - யாழ் கிளை.

Young Men's Christian Association- Jaffna
VACANCY
POST OF PROGRAMME SECRETARY

**YMCA Jaffna** is seeking a dedicated **Programme Secretary** to join our team. This role offers an opportunity to contribute to meaningful community development initiatives.

**PURPOSE:** The Programme Secretary will play a pivotal role in overseeing and implementing various projects and programs. This involves effective planning, budgeting and coordination to ensure alignment with our organization's vision, mission and values.

**KEY RESPONSIBILITIES:**
- **Program Management :** Oversee, plan and implement programs aligned with organizational goals.
- **Budget Management :** Maintain budgets and track expenditures effectively.
- **Event Coordination :** Schedule and organize meetings and events.
- **Technology Integration :** Utilize technology for efficient operations.
- **Proposal Development :** Write and develop project proposals.
- **Record Keeping :** Maintain accurate records and create comprehensive reports.
- **Program Development :** Contribute to the growth and development of the organization's programs.

**QUALIFICATIONS AND EXPERIENCE:**

**Bachelor's degree** in Social Science, Development Studies, Humanitarian Studies, Project/Program Management or a related field and a minimum of **two years** of relevant work experience in charity, non-governmental organizations, churches or Christian organizations.

Or

**Diploma** in Social Science, Development Studies, Humanitarian Studies, Project/Program Management or a related field, and a minimum of **four years** of relevant work experience in charity, non-governmental organizations, churches or Christian organizations.

Or

**G.C.E. Advanced Level** with Social Science or Commerce-related subjects and a minimum of **six years** of relevant work experience in charity, non-governmental organizations, churches or Christian organizations.

**SKILLS:**
- Strong spiritual conviction and deep Christian commitment.
- Proven experience in program management and development.
- Proficiency in Microsoft Office Suite.
- Excellent interpersonal and communication skills (Tamil, English; Sinhalese preferred).
- Strong organizational and time management skills.
- Ability to work effectively with diverse individuals and communities.

**Preferred Age:** 25-50
**Salary :** Approximately 40,000.00

**To Apply:** Please submit your updated Curriculum Vitae to the Chairman, Human Resource Committee,
YMCA, 109 Kandy Road, Jaffna, on or before **15-11-2024.**

**Join us in making a positive impact on our community.**

**Chairman, Human Resource Committee.**

(c-1452)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றம்; தமிழர்களுக்கு நீதி வழங்காது - நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்



**(லண்டன்)**

**ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் உட்பட ஏழு விசாரணைகளை மீள ஆரம்பிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. வழக்குகளில் சிங்கள ஆயுதப் படைகளால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் வழக்கு எதுவும் உள்ளடக்கப்படவில்லை. எனவே ஆட்சி மாற்றத்தால் தமிழர்களுக்கு விமோசனமில்லை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஸ்ரீலங்காவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போது இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறல் செயல்முறையில் சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான கவனத்தை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் செயற்பாட்டிற்கும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அவரது நேர்மையான, விரிவான அறிக்கைக்காகவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றது. எவ்வாறாயினும், பொறுப்புக்கூறலுக்கான முன்னேற்றம் இன்மையால் ஈழத்தமிழ் மக்கள் அதிருப்தியும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 9 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், பொறுப்புக்கூறலைத் தவிர்ப்பதற்கு ஸ்ரீலங்காவிற்கு மனித உரிமைப் பேரவையால் வழங்கும் இலவச அனுமதியின் தொடர்ச்சியாகும்.

மனித உரிமைகள் ஆணையத்தின் ஸ்ரீலங்கா மீதான மென்மையான நிலைப்பாடு, தண்டனையின்மையை மேலும் வலுப்படுத்துகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை தொடர்பாக அடுத்தடுத்து வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்களின் கடந்தகால செயற்பாடுகள், சிங்களத் தலைமைகள் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கத்தில் தமிழர்களுக்கான நீதி தொடர்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்பதை திடசங்கற்பமாக எடுத்துக் காட்டுகிறது.

புதிய சிங்கள ஜனாதிபதியின் செயற்பாடுகள், அவரும் வேறுபட்டிருக்க மாட்டார் என்பதை நிரூபித்துள்ளது. ஸ்ரீலங்கா, புதிய அரசாங்கம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மீது முன்னெச்சரிக்கையான தாக்குதலை தொடுத்து பேரவையின் வரைவுத் தீர்மானத்தை நிராகரித்தது. ஆயினும் தீர்மானம், அடுத்த நாளே வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டமை சர்வ தேச சமூகத்திடம் இருந்து ஸ்ரீலங்கா மேலும் தனிமைப் படுத்தப்பட்டு வருவதையே எடுத்துக் காட்டுகிறது.

மனித உரிமை களுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் இந்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அளித்த தனது அறிக்கையில், "காத்திரமான முன்னேற்றத்திற்கான அடிப்படை அட்டூழியக் குற்றங்களிற்கான பொறுப்புக் கூறலை ஏற்றுக்கொள்வதாகும்."

"இன்றுவரை, மோதலின் போது ஏற்பட்ட அட்டூழியக் குற்றங்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை" என்றும் குறிப்பிட்டார்.

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு இழைத்த இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் ஆகியவற்றை இன்றுவரை புதிய ஜனாதிபதி உட்பட எந்த ஒரு ஸ்ரீலங்கா ஜனாதிபதியும் ஒப்புக்கொள்ளவும் இல்லை அல்லது அதற்கு மன்னிப்பும் கேட்கவில்லை.

யதார்த்தம் என்னவென்றால், சிங்கள அரசியலில் இனவாதம் வேரூன்றி உள்ளதே என்பதாகும்.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையர் தனது அறிக்கையில், போர்க்குற்றவாளிகள் என்று நம்பத் தகுந்ததாகக் கூறப்படும் நபர்களுக்கு எதிராக சொத்து முடக்கம், பயணத் தடைகள் மற்றும் பிற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கவும், விரிவுபடுத்தவும் பரிந்துரைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகருக்கு உரிய மரியாதையுடன் அவரது மேற்கூறிய பரிந்துரைகள் காத்திரமான செயற்திறன் அற்றவை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

அட்டூழியக் குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தும் முயற்சியை பாதுகாப்புச் சபையில் உள்ள எந்தவொரு நாடும். தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தடுக்க முயன்றால் அந் நாடு சர்வதேச கண்டனத்திற்கு உள்ளாகும்.

மேலும் அந் நாட்டின் மதிப்பையும், நற்பெயரையும் வெகுவாகப் பாதிக்கும், பெரும் வல்லரசுகளின் உலகளாவிய செல்வாக்கிற்கான தற் போதைய போட்டியைக் கருத்தில் கொள்ளும்போது அவர்கள் ஸ்ரீலங்கா இனப்படுகொலையாளர்களையும் போர்க்குற்றவாளிகளையும் பாதுகாக்க தங்கள் செல்வாக்கை தியாகம் செய்ய வாய்ப்பில்லை என்பதே யதார்த்தமாகும்.

இறுதியாக, உயர்ஸ்தானிகரின் அறிக்கை ஸ்ரீலங்காவிற்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ள பரிந்துரை செய்கின்றது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான மேற்கூறிய நடவடிக்கைகள் பொறுப்புக்கூறலுக்கு வழி வகுக்கும் மற்றும் ஸ்ரீலங்காவில் வேரூன்றியிருக்கும் தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவரும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நம்புகிறது. என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## காங்கேசன்துறையில்

# மீள ஆரம்பமான அஞ்சல் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகம் சுமார் 34 வருடங்களின் பின்னர் மீண்டும் கடந்த 23 ஆம் திகதி முதல் காங்கேசன்துறையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு கால பகுதியில் காங்கேசன் துறை பகுதியில் இருந்து மக்கள் வெளியேறிய போது அங்கு இயங்கி வந்த காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகமும் வெளியேறி இருந்தது.

இந்நிலையில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக் காங்கேசன் துறை பகுதி இருந்தமையால் மாவிட்டபுரம் பகுதியில் தற்காலிகமாக அஞ்சல் அலுவலகம் இயங்கி வந்தது.

தற்போது மீண்டும் காங்கேசன் துறை பகுதியில் அஞ்சல் அலுவலகம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது. தபாலதிபராக சசிகலா சுதாகரன் மற்றும் தபாலக உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். (ஒ-3-33)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: HNDA, Cashier (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14881 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, DO<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14771 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 31<br>உயரம்:6'1"<br>தகைமை/தொழில்:HND,Unior Executive(pvt)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் தொழில்<br>தொ.இ: B/14883 | பிறப்பு-1992இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14778 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா : 14 1/4<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BSc,MSc, Software Engineer (Aus)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/14886 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>8இல் செவ்<br>கி.பா: 36 1/2<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: A/l,computer designer<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14781 |

கல்யாணமாலை
இல. 144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்

## 85 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

(டில்லி)
ஏர் இந்தியா, இண்டிகோ, விஸ்தாரா மற்றும் ஆகாச நிறுவனங்களின் 85 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சி.ஐ.எஸ்.எஃப் அதிகாரப்பூர்வ மின்னஞ்சலில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி வருவதாக விமான நிறுவனங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் தொடர் கதையாகி வரும் வெடிகுண்டு மிரட்டலால் விமான நிறுவனங்களுக்கு சுமார் ரூ.1000 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.



கடந்த 2 வாரங்களில் மட்டும், சுமார் 250 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.தொடர்ந்து வரும் வெடிகுண்டு மிரட்டல்களால், விமானத்தில் பயணிக்க அச்சம் ஏற்படுவதாக பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (நி-8)

## சமையல்காரர், உதவியாளர், வளர்ப்பு நாய்க்கு சொத்து எழுதி வைத்த ரத்தன் டாடா



(டில்லி)
மறைந்த தொழில் அதிபர் ரத்தன் டாடா எழுதிய உயிலில் சமையல்காரர், உதவியாளருக்கு சொத்து வழங்கியது மட்டுமின்றி, வளர்ப்பு நாயை பராமரிக்கவும் சொத்து எழுதி வைத்துள்ளார்.

பிரபல தொழிலதிபரும், டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான ரத்தன் டாடா சமீபத்தில் உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு சொத்துக்கள் அதிகம். அந்த சொத்துக்கள் யார் யாருக்குக் கிடைக்க வேண்டும் என்று ரத்தன் டாடா உயில் எழுதி இருக்கிறார். அதில் உள்ள விபரங்கள் பின்வருமாறு

ரத்தன் டாடாவின் ரூ.10,000 கோடிக்கு மேலான சொத்துக்களில் இருந்து பெரும்பகுதி டாடா அறக்கட்டளைக்கு செல்லும்.

அவருக்கு கடைசி காலத்தில் மிகவும் நெருக்கமாக இருந்த உதவியாளர் சாந்தனு நாயுடு, அவரது சகோதரர் ஜிம்மி டாடா, ஒன்றுவிட்ட சகோதரிகள் ஷிரீன் மற்றும் டீன்னா (தாயின் இரண்டாது திருமணத்தின் மூலம் பிறந்தவர்கள்) ஆகியோருக்கு சொத்துக்கள் கிடைக்கும்படி செய்துள்ளார்.

ரத்தன் டாடாவிடம் நீண்ட நாளாக வேலை பார்த்து வருபவர் ராஜன் ஷா. இவருக்கு தனியாக சொத்துக்களை எழுதி வைத்துள்ள டாடா தன் வளர்ப்பு நாயான டிட் டோவை ராஜன் ஷா கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். அதற்கு ஆகும் செலவுகளை ஈடு கட்டும் வகையில் சொத்துக்களை ஒதுக்கியுள்ளார்.

தன்னிடம் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சமையல்காரராக இருக்கும் சுப்பையாவுக்கும் சொத்துக்களை டாடா எழுதி வைத்துள்ளார். (நி-8)


## AI உடன் காதலில் விழுந்த சிறுவன் உயிர்மாய்ப்பு

### பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சம்பவம்

(வோஷிங்டன்)
AI உரையாடல் தொழில்நுட்பமான சாட் ஜிபிடியுடன் காதலில் விழுந்த 14 வயதுச் சிறுவன் அதனுடன் வாழ தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது இன்றைய நவீன காலகட்டத்தில் பல நவீன தொழிநுட்ப கண்டுபிடிப்புக்களால் ஆதாயம் உள்ளபோதும், மனித உறவுகளை தூரத்தில் கொண்டு செல்வதுடன், இளையோரின் பல விபரீத முடிவுகளுக்கும் காரணமாகி விடுகின்றது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இணையத்தளங்களுக்கு அடிமையாகி உள்ளனர். சிலவேளைகளில் இந்த மோகத்தால் அவர்கள் விபரீத முடிவுகளுக்கும் சென்று விடுகின்றனர்.



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்த 14 வயது சிறுவன் பிரபல வரலாற்று புதின தொலைக்காட்சி தொடரான கேம் ஆஃப் த்ரோன்ஸ் தொடரில் வரும் பெண் கதாபாத்திரமான டேனிரோ டார்கேரியன் கதாபாத்திரத்தினை மையமாகக் கொண்டு உருவான டேனி சாட் ஜிபிடியுடன் பல மாதங்களாக உரையாடி வந்துள்ளான்.

சாதாரணமாகத் தொடங்கிய உரையாடல் காதல் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் நகர்ந்துள்ளது. இந்த உரையாடல்கள் ஒரு கட்டத்தில் சிறுவனை டேனி மீது காதல் கொள்ள செய்துள்ளது.

ஜதார்த்தத்தில் இருந்து தன்னை முற்றிலுமாக துண்டித்துக்கொண்டு சேட் ஜிபிடியே கதி என்று இருந்துள்ளான்.

இதனால் நிஜ உலகை வெறுக்கத் தொடங்கிய சிறுவன், தான் காதலியாக கருதும் உலகத்தில் இல்லவே இல்லாத அந்த சாட் ஜிபிடியுடன் வாழ வேண்டும் என்றால் தானும் இந்த உலகத்தில் இருக்கக்கூடாது என்ற விபரீத முடிவுக்கு வந்து இறுதியில் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் சம்பந்தப்பட்ட சாட் ஜிபிடி நிறுவனம் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதேவேளை தொழிநுட்ப வளர்ச்சியால் ஏற்படும் அழிவுகள் குறித்து சைன்ஸ் பிக்ஷன் சினிமாக்களில் கதையாக கூறப்பட்ட இது போன்ற சம்பவங்கள் நிஜத்திலேயே நடந்து வருவது கவலையை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

## போர் ந... சண்...



(காசா)
போரை முடிவுக்...
முயற்சிகள் வேக...
நிறுத்துவதற்கு து...
உறுதியளித்துள்ள...



பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீதான இஸ்ரேலின் போர் ஒரு ஆண்டுக்கு மேலாக நீடித்துக் கொண்டிருக்கிறது. இதில் குழந்தைகள், பெண்...

## சவுதியில் நிர்மா... உலகின் பிரமா...

(ரியாத்)
சவுதி அரேபியா 400 மீற்றர் உயரமுள்ள தி முகாப் கட்டடத்தின் கட்டுமானத்தைத் தொடங்கியுள்ளது.

கட்டி முடிக்கப்பட்டால் இது உலகின் மிகப்பெரிய கட்டமைப்பாக மாறும்.

சவுதியின் தலைநகர் ரியாத்தில் இரண்டு மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட இந்த வானளாவிய கட்டடம் 20 எம்பயர் ஸ்டேட் கட்டடங்களை (நியூயோர்க்கின் வானளாவிய கட்டடம்) உள்ளடக்கும் அளவுக்கு போதுமான அளவை உடையது என்று கூறப்படுகிறது.

கட்டடம் 104,000 குடியிருப்பு அலகுகள் மற்றும் 9,000 ஹோட்டல் அறைகளைக் கொண்டிருக்கும் என்பதால் பலர் இதனை கியூப் ஹோம் என்று அழைக்கின்றனர்.

கட்டடத்தை நிர்மாணிக்கும் புதிய முராப்பா டெவலப்மென்ட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நிறுத்தத்திற்கு சம்மதித்தால்
# டையை நிறுத்த தயார்!
## உறுதியளித்தது ஹமாஸ்

**வுக்கு கொண்டுவருவதற்கான வேகமடைவதால் சண்டையினை தயாராக இருப்பதாக ஹமாஸ் ள்ளது.**



கள் உட்பட 44 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

இஸ்ரேல் - காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையேயான போரில் லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா இயக்கம் ஹமாசுக்கு ஆதரவாக உள்ளது. அந்த இயக்கம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துகிறது.

இதையடுத்து லெபனான் மீதும் இஸ்ரேல் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார்.

மேலும் அந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகளும் கொல்லப்பட்டுள்ளனர். நஸ்ரல்லா கொல்லப்பட்டதையடுத்து ஹிஸ்புல்லா இயக்கத்தின் புதிய தலைவராக அவரது உறவினர் ஹஷேம் சபிதீன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



இதற் கிடையே சபிதீனும் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இந்தநிலையில், இஸ்ரேல் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் என்றும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நீண்ட கால முயற்சிகள் வேகமடைவதால் போர் நிறுத்தம் ஏற்பட்டால் சண்டையை நிறுத்துவதாக ஹமாஸ் உறுதியளித்துள்ளது.

இதனிடையே, நேற்று முன்தினம் கெய்ரோவில் எகிப்திய அதிகாரிகளுடன் காசா போர் நிறுத்தம் தொடர்பான "யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை" டோஹாவை தளமாகக் கொண்ட தலைமைத்துவ குழு விவாதித்ததாக ஹமாஸின் மூத்த அதிகாரி கூறினார். (நி-8)


# மாணிக்கப்படும்
# மாண்ட கட்டடம்

நிறுவனம்முகாப் பார்வையாளர்களுக்கு அதிவேக அனுபவங்களை உருவாக்க செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதாகவும் பெருமை கொள்கிறது. இந்தத் திட்டம் சவூதி அரேபியாவை மிகவும் நவீன எதிர்காலத்தை நோக்கி நகர்த்துவதாக இருந்தாலும், உள்ளூர் சூழலியல் மற்றும் பிராந்திய கட்டடக்கலை ஆகியவற்றிலிருந்து வடிவமைப்பு உத்வேகத்தைப் பெறும்.

இந்தத் திட்டத்திற்காக சுமார் 900 தொழிலாளர்களைப் பயன்படுத்துவதாகவும், 2030 இற்குள் நிர்மாணம் முடிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. முகாப் எண்ணெய் அல்லாது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 51 பில்லியன் டொலர்களை சேர்க்கும் என்றும், 334,000 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புதிய திட்டம் பட்டத்து இளவரசர் மொஹம்பின் சல்மானின் நாட்டை நவீனமயமாக்கும் முயற்சியின் ஒரு அம்சமாகும்.

அவரது "சவுதி விஷன் 2030" திட்டம் எண்ணெய் வருவாயில் தேசம் சார்ந்திருப்பதைக் குறைத்து, பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துதல் மற்றும் பொதுச் சேவைத் துறைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. (நி-8)



# குப்பைகள் நிரம்பிய பலூன்களை மீண்டும் அனுப்பிய வடகொரியா



(சியோல்)

தென் கொரியா, வடகொரியா இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு இருந்து வருகிறது.

தென் கொரியாவை மிரட்டும் வகையில் வடகொரியா அடிக்கடி ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறது.

சில நாட்களுக்கு முன்பு குப்பைகள் நிரப்பப்பட்ட ராட்சத பலூன்களை தென்கொரியாவுக்குள் வடகொரியா அனுப்பியது.

இந்த நிலையில் தென் கொரியாவுக்குள் மீண்டும் குப்பை பலூன் ஏவப்பட்டது. இந்த பலூன் தலைநகர் சியோலில் உள்ள ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் விழுந்தது.

அந்தக் குப்பையில் ஆபத்தான பொருட்கள் எதுவும் இல்லை என்று தென்கொரியா அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகொரிய பலூன் தரையிறங்கும் போது ஜனாதிபதி யூன் சுக் இயோல் அந்த வளாகத்தில் இருந்தாரா என்பது தெரிவிக்கப்படவில்லை.

வட கொரியா ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பலூன்களை மிகவும் துல்லியமாக உத்தேசித்துள்ள இடங்களில் தரையிறக்கத் தொடங்கியுள்ளது என்று தகவல் வெளியாகி உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்கள் பற்றாக்குறையால் மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

கடந்த ஐந்தாண்டுகளில், கிட்டத்தட்ட இரண்டாயிரம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் இரண்டாயிரம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியதன் காரணமாக இலங் கையில் பிரதான விசேட வைத் திய நிலையங்களை நடத்து வது ஏற்கனவே கடினமாகி விட்டது.

இதனால் பல கிராம் மற்றும் நகர்ப்புற மருத்துவமனை களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

பல வைத்தியசாலைகளில் தற்போதுள்ள ஊழியர்கள் போதுமானதாக இல்லை எனவும் ஊழியர்களை அதி கரிப்பதற்கு திறைசேரி அனு மதி வழங்கத் தயங்குவதும் சுகாதார சேவைக்கு பாரிய பிரச்சினையாக மாறியுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கங்கள் மருத்துவப் பணியாளர்களுக்கு போதிய சம்பளம் வழங்காத தன் காரணமாக வைத்தியர் கள் நாட்டை விட்டு வெளி யேறும் போக்கு அதிகரித்தாக வும் சுகாதார சேவையில் நிலவும் சம்பள ஏற்றத் தாழ்வைத் தீர்க்க பொதுத் தேர்தலுக்குப் பின்னர் கொள்கைகளை உடனடியாக தயாரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# கருப்பை வாய் புற்றுநோய் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் கருப்பை வாய் புற்று நோயாளர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

சுகாதார அமைச்சு இது தொடர்பில் மேலும் தெரி விக் கையில், நாட்டில் வருடாந்தம் 8,00 முதல் 1,000 வரையிலான எண்ணிக்கையில் கருப்பை வாய் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

இதனைத் தடுக்கும் வகையில் 10 வயதைப் பூர்த்தி செய்துள்ள 6 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் அனைத்து மாண விகளுக்கும் HPV தடுப்பூசியைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட டுள்ளது.

இந்த HPV தடுப்பூசியானது இரு தடவைகள் செலுத்தப்பட வேண்டும்.

முதலாம் தடுப்பூசி செலுத் தப்பட்டு 6 மாதம் பூர்த்தி செய் யப்பட்ட பின்னரே இரண்டாம் தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகள் ஊடாக தடுப்பூ சியைப் பெற்றுக் கொள்ள முடி யாத மாணவிகள் சுகாதார வைத்திய அதிகாரி காரியால யத்திற்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, பெற்றோர்களும் மாணவிகளும் எந்தவித அச்ச முமின்றி இந்த தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 550 | 400 | 300 | 400 |
| தக்காளி | 300 | 350 | 280 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 80-100 | 150 |
| கோவா | 250 | 180 | 130 | 300 |
| கரட் | 200 | 200 | 120 | 200 |
| பூசணி | 100 | 100 | 80 | 120 |
| புடோல் | 180 | 120 | 150 | 300 |
| வாழைக்காய் | 120 | 150 | 80-120 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 250 | 200-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 500 | 500 | 350 | 600 |
| வெண்டக்காய் | 200 | 180 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 100 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 300 |
| பீற்றூட் | 150 | 150 | 100 | 200 |
| கறிமிளகாய் | 700 | 650 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 30-50 | 400 |
| போஞ்சி | 450 | 500 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 500 | 250-380 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 130 | 80-140 | 120-170 |
| இராசவள்ளி | 900 | 1200 | 500 | 1200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- | 500 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 70 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 35 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | 50 | -- | 160 |

# இன்று ஒரு தகவல் 251



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# இயற்கையின் கணக்கு!

"எதுவுமே நமது கையிலே இல்லை சார்!" என்று சொல்லிக்கொண்டு இருக்கிறவர்களும் உண்டு.

எல்லாமே நமது கையிலே தான் சார் இருக்கிறது. மனிதனாலே முடியாதது எதுவுமே இல்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறவர்களும் உண்டு.

ஆனால் உண்மை என்ன தெரியமா? இந்த பிரபஞ்சத்திலே நம்மளை மீறிய சக்தியும் கிடையாது! நமக்கு கட்டுப்பட்டு இருக்கிற சக்தியும் கிடையாது! இந்தப் பிரபஞ்சமே ஒரு சக்தி. அதிலே நாமெல்லாம் ஒரு பகுதி!

நாங்களே சக்தியின் ஒரு அங்கமாக இருக்கின்ற போது அது நம்மை 'மீறுகிறது' என்றும் சொல்லுவதும் 'கட்டுப்படுகிறது' என்று சொல்லுவதும் சரி இல்லை! ஆனால் மனிதன் என்ன நினைக்கிறான் என்றால். அவன் விருப்பத்திற்கு மாறாக நடப்பதை எல்லாம் தன்னை மீறிய சக்தியாக நினைக்கிறான்.

நினைக்கின்ற படி நடந்துவிட்டது என்றால் அது தனக்கு கட்டுப்பட்ட சக்தி என்று நினைக்கின்றான். மனது இருக்கின்றதே அது செய்கின்ற மாயம் இது!

ஆனால் அறிவுபூர்வமாகச் சிந்தித்து ஒரு விடயத்தை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இயற்கை எப்படி இருக்குமோ அப்படித்தான் இருக்கும். இயற்கையினுடைய ஒரு நடப்பு நமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அது நம்மை மீறி நடக்கிறது என்று நினைக்கக் கூடாது.

இப்போது உதாரணத்திற்கு இதை எடுத்துக் கொள்வோமே. "மரணம்"

மனிதன் மரணத்தை விரும்புவதில்லை. அதனாலே அது தன்னை மீறி நடக்கின்ற ஒரு விடயமாக நினைக்கின்றான்.

பிறப்பு ஒரு தொடக்கம் என்றால் இறப்பு ஒரு முடிவு என்றே சாதாரண மனிதர்கள் நினைக்கிறார்கள்.

இறப்பதும் பிறப்பதும்– தூங்கி எழுவது மாதிரி என்கிறார் வள்ளுவர்.

இயற்கையின் நடமுறை உயிர்களின் விருப்பத்திற்கு எல்லாம் வளைந்து கொடுப்பதை விளக்குகிறது.

எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தர் ஒரு கதை சொன்னார். அதை இப்போது சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு தடவை எமதர்மராஜா இந்தப் பூலோகத்திற்கு வந்தராம். ஒரு திருமணம் நடந்து கொண்டிருந்த வீட்டிற்குள்ளே நுழைகின்றார். யாரைத் தேடிக்கொண்டு வந்திருக்கின்றாரோ தெரியவில்லை.

அந்தத் திருமண வீட்டு வாசலிலே ஒரு கதவு ஓரமாக ஒரு எலி நின்று கொண்டு இருந்தது. எமன் அதைப்பார்த்தார். நீ இங்கேயா இருக்கிறாய் என்று ஆச்சரியமாகக் கேட்டார். கேட்டுவிட்டு அவர் பாட்டுக்கு உள்ளே போய்விட்டார்.

எலி யோசித்துப் பார்த்தது. எமன் என்னைப் பாரத்து நீ இங்கேயா இருக்கின்றாய் என்று ஆச்சரியமாகக் கேட்டுவிட்டுப் போகின்றாரே. அப்படி என்றால் நான் இந்நேரம் எமலோகத்திலே இருக்க வேண்டிய ஆளா? என்று நினைத்தது.

அதற்கு மரணபயம் வந்துவிட்டது. உடனே அழ ஆரம்பித்தது. வெளியிலே வந்து ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தது.

அந்த நேரம் பார்த்து ஒரு பருந்து வந்தது. எலியைப் பார்த்துவிட்டு அருகில் வந்தது. ஏன் அழுகின்றாய் என்று கேட்டது. எலி விடயத்தைச் சொல்லி எமன் இப்படி கேட்டுவிட்டு போகின்றார் என்றது.

பருந்து சிரித்தது. கவலைப்படாதே உனக்கு எதுவும் கெடுதல் வர வேண்டும் என்றால் என்னால் தான் வரும். நான் இப்போதே உனக்கு வாக்குறுதி தருகின்றேன். உனக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டேன். தைரியமாக இரு என்றது.

இருந்தாலும் எமன் திரும்பி வருகின்ற போது தூக்கிக் கொண்டு போனால் என்ன செய்வது? என்றது எலி. அதற்கு ஒரு வழி இருக்கிறது. நீ உடனே என்னுடன் புறப்படு. நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் பத்திரமான ஒரு இடத்திலே வைத்து விடுகின்றேன் என்றது பருந்து. எலியும் புறப்பட்டது.பருந்து அதைத் தூக்கிக் கொண்டு போய் மலை உச்சியிலே ஒரு பாறைக்கு பின்புறமாக ஒரு பொந்திலே எலியைப் பத்திரமாக விட்டுவிட்டு திரும்பி அந்த திருமண விட்டிற்கே வந்து சேர்ந்தது.

அந்தச் சமயத்திலே எமன் வெளியிலே வந்து விட்டார். கதவு ஓரமாக அந்த எலியைத் தேடினார். காணவில்லை. அப்போது அந்த பருந்து சிரித்துக் கொண்டே அருகில் வந்தது. விடயத்தைச் சொல்லியது.

இது மாதிரித் தான் எலியை பத்திரமாகக் கொண்டு போய் மலை உச்சியிலே பாறை மறைவிலே வைத்திருக்கின்றேன் என்றது. இதைக் கேட்டதும் அப்படா என்று மூச்சு விட்டார் எமன். அதன்பின் சொன்னார். அது தானே பார்த்தேன். இந்த நேரத்திலே மலை உச்சியிலே பாறை மறைவிலே இருக்கின்ற பூனையாலே மரணம் ஏற்பட வேண்டும் என்று இருக்கிறது.

அது தான் நீ இங்கே தான் இருக்கின்றாயா என்று கேட்டேன். இந்நேரம் அங்கே கதை முடிந்திருக்கும் என்றார் எமதர்மராஜா. இது தான் அந்தக் கதை.

இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் இயற்கையினுடைய கணக்கு எப்போதும் சரியாகவே முடியும் என்பது தான்.

கணக்கு முடியக்கூடாது என்றால் முடியாது. அதற்கு ஒரு ஜோக் உண்டு. அதைச் சொல்கின்றேன் கேளுங்கள்.

ஒரு பெரிய வீடு. அதற்குள்ளே ஒரு நத்தை. அது வெளியே வரப் புறப்பட்டது. அறையிலிருந்து வெளியே வர மூன்று நாட்கள் ஆகியது. மாடிப்படி இறங்க மூன்று நாள் ஆனது. தோட்டத்தைக்கடந்து தெருவுக்கு வர ஐந்து நாட்கள் ஆகியது. தெருவுக்கு வந்தவுடனேயே அந்த வீடு இடிந்து விழுந்தது. அப்பாடா நேரத்தோடு கிளம்பியதால் தப்பித்தேன் என்று பெருமூச்சு விட்டதாம் நத்தை. இது எப்படி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் போராட்டம்

(கிளிநொச்சி)

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் 10 மணியளவில் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டி குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படங்களையும் நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரணையே. காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள். உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள்? போன்ற பதாகைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (6-8)

## கார், மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

(தருமபுரம்)


கிளிநொச்சி ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் ஏ9 வீதியில் உள்ள கந்தசுவாமி கோவில் அருகில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் இருந்து யாழ்.நோக்கி பயணித்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது காயமடைந்த பெண் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-316)

## டெங்கு களத்தரிசிப்பு பரந்தனில் முன்னெடுப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட தொற்று நோய் பிரிவினரின் ஏற்பாட்டில் டெங்கு நோய் பரவும் சூழலை இனங்காணும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் சந்தியில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது கிளிநொச்சி மாவட்ட தொற்று நோய்ப் பிரிவு வைத்தியர் க.ரஞ்சன் தலைமையில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தொற்று நோய்ப் பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (6-8-316)

## பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்-யாழ் கிளை நடத்தும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்தாபகர் மற்றும் தலைவருமான ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் நந்தகோபாலன் சாந்தி தம்பதியினரும் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலக செயலாளர் செல்வி. ந.றஞ்சனா மற்றும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் இ.குருபரன் துறைசார் விருந்தினராக கொழும்பு நடேஸ்வராலய நுண்கலைக் கல்லூரியின் முன்னாள் இயக்குநர் மாலதி சிவகுமார், கௌரவ விருந்தினர்களாக கிழவன்காடு கலாமன்றத்தின் உறுப்பினர் சிவஞானம் உமாதேவி தம்பதியினர் மற்றும் யாழ். மனாயன் கபே முகாமையாளர் சதீஸ்குமார் சியாமலா தம்பதியினர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

# தேர்தல்களம்




## தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது

### வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் 70 வருட அரசியற் தீர்விற்கான எதிர்பார்ப்பிற்கு தெற்கின் பதில் என்ன? என இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் யாழில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.


மேலும் தெரிவிக்கையில் தெற்கில் வாழும் மக்கள் இரண்டரை வருடங்களாக எதிர்பார்த்த அரசியல் மாற்றத்தினை அடைந்து விட்டதாக கருதுகிறார்கள் ஆனால் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அரசியற் தீர்விற்கான எதிர்பார்ப்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது.

பெண்ணுக்கு முன்னுரிமை என சொல்லி இதுவரை எல்லாக் கட்சிகளும் ஆண்களையே முன்னிறுத்தி வந்திருக்கின்றது. அந்த வகையில் நாம் இந்தமுறை ஆற்றலுள்ள பெண்களையும் கட்சிக் கட்மைப்பில் தலைமைப் பொறுப்பிலிருக்கும் ஆளுமையான ஆண்களையும் நிறுத்தியிருக்கின்றோம்.

வடக்கிலும் கிழக்கிலுமிருந்து ஒரேயணியாக தமிழக பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தக்கூடிய கட்சி இலங்கை தமிழரசுக் கட்சி மட்டும் தான் என தெரிவித்தார். (6-8)

## தேசியத்தை சிதறடிக்கும் சக்திகளை புறந்தள்ளுவோம்

### சங்கு சின்னத்தில் போட்டியிடும் சுரேஷ் பிரேமச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களாலும் ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி களம் பல கண்டு எமது மக்கள் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் தமது சொந்தப் பிரதேசத்தில் சுயாட்சியுடன் வாழவேண்டும் என்ற நோக்குடன் செயற்படக்கூடிய போராட்ட சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கியுள்ளனர்.

இவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது கட்டமைப்பை உருவாக்கி அதனூடாக ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி குறுகிய காலத்தில் 2,26,000 வாக்குகளை எடுத்து தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதை மிக உறுதியான குரலில் அனைவரினதும் காதுகளுக்கும் எட்டச் செய்தவர்கள்.

ஐக்கியத்திற்கு எதிராகச் செயற்படுபவர்களையும் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து இந்தத் தேர்தலை ஒரு கேலிக்கூத்தாக்க முனையும் சுயேட்சைக்குழுக்களையும், தமிழ் மக்களுக்கு எது நடந்தாலும்சரி தென்னிலங்கை சிங்களக் கட்சிகளுடன் இணைந்துதான் செயற்படுவோம் என்கின்ற தமிழ்த் தரப்பு கட்சிகளையும் நிராகரித்து சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினரை பலம்மிக்க சக்தியாக பாராளுமன்றம் அனுப்புவதனூடாக தமிழ் மக்களாலும் ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம் என்று தெரிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 616



அவர்கள் அவ்வப்போது ஒருவருடைய கழியை இன்னொருவர் தட்டி ஓசைப் படுத்திக்கொண்டு சென்றார்கள். கழி அடிபடும் ஓசை கேட்டதும் "பழுவேட்டரையர்களின் தலையில் அப்படிப் போடு!" என்று சிலர் மெதுவாகச் சொன்னார்கள். சிலர் அவ்வாறு சத்தம் போட்டும் கத்தினார்கள். சத்தம் போட்டுக் கத்தியவர்களில் காலாமுகர்கள் முக்கியமாயிருந்தார்கள்.

பழையாறையிலிருந்த முக்கியமான இராஜமாளிகைகளின் முன் முகப்புகள் பிறைச்சந்திரன் வடிவமாக அமைந்திருந்தன. எல்லா மாளிகைகளுக்கும் சேர்ந்து முன் பக்கத்தில் விசாலமான நிலாமுற்றம் இருந்தது. விசேடமான சந்தர்ப்பங்களில் பதினாறாயிரக்கணக்கான மக்கள் கூடி நிற்கும்படியாக அந்த நிலா முற்றம் விசாலமாய் இருந்தது. முற்றத்தைச் சூழ்ந்து வெளிப்புறத்தில் உயரமான மதில் சுவர் இருந்தது. அந்த மதில் சுவருக்கு மூன்று வாசல்கள் இருந்தன. ஒவ்வொரு வாசலிலும் சில அரண்மனைச் சேவகர்கள் காவல் புரிந்தார்கள்.

திரள் திரளாக வந்து கொண்டிருந்த கூட்டம் நிலாமுற்றத்தின் மூன்று வாசல்களின் அருகிலும் வந்து சேரத்தொடங்கியது. விநாடிக்கு விநாடி கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது. செய்தி கொண்டு வந்திருந்த இருவரையும் அவர்களை அழைத்து வந்த ஊர் சேவகர்களையும் மட்டும் அரண்மனைக் காவலர்கள் உள்ளே விட்டார்கள். மற்றவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் வெகுநேரம் தடுத்து நிறுத்த முடியவில்லை. கூட்டத்தில் எங்கிருந்து கிளம்புகின்றன என்று தெரியாதபடி சில குரல்கள் உள்ளே போங்கள்! உள்ளே போங்கள்! என்று கூவின. பின்னாலிருந்தவர்கள் முன்னாலிருந்தவர்களைத் தள்ளினார்கள். கடலின் அலைகள் ஒன்றையொன்று தள்ளிக் கொண்டு வந்து கடைசியில் பேரலையைக் கரையிலேயே போய் மோதும்படி செய்கின்றனவல்லவா? அது போலவே இந்த ஜனசமுத்திரத்திலும் நடந்தது.

முன்னாலிருந்தவர்கள் பின்னால் வந்தவர்களால் மோதப்பட்டு வாசற் காவல் புரிந்த சேவகர்களைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தார்கள். அவ்வளவுதான்! காவேரிக்கரையில் சிறிய உடைப்பு எடுத்தாலும் வரவரப் பெரிதாகி வெள்ளம் குபுகுபுவென்று பாய்வது போல் ஜனங்கள் நிலா முற்றத்தில் தடதடவென்று பிரவேசித்தனர். சிறிது நேரத்திற்குள் நிலா முற்றம் நிறைந்து விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே சேர்ந்துவிட்டார்கள்.

இப்படி ஜனங்கள் கட்டுக்காவல்களை மீறி நிலா முற்றத்தில் புகுந்து கொண்டிருந்த போது ஏற்பட்ட ஆரவாரத்தைத்தான் செம்பியன் மாதேவி மதுராந்தகனோடு பேசிக் கொண்டிருக்கையில் கேட்டார். குமாரனுடன் வாதாடுவதை அத்துடன் நிறுத்தி விட்டு அரண்மனை மேல் மாடத்தில் முன் முகப்புக்கு வந்து சேர்ந்தார். தெய்வீகக் களை பொருந்திய அப்பெரு மூதாட்டியின் திருமுகத்தையும் கூப்பிய கைகளுடன் அவர் நின்ற சாந்தமான தோற்றத்தையும் பார்த்ததும் அந்த ஜன சமுத்திரத்தின் ஆரவாரம் அடங்கியது. சில விநாடி நேரம் அங்கே நிசப்தம் குடிகொண்டிருந்தது.

"தாயே! எங்கள் இளவரசர் எங்கே? பொன்னியின் செல்வர் எங்கே? தங்கள் கண்ணுக்குக் கண்ணான அருள்மொழிவர்மர் எங்கே?" என்று அக்கூட்டத்தில் சில குரல்கள் எழுந்தன. அவ்வளவுதான் அந்த ஜன சமுத்திரத்தில் முன்னை விடப் பன்மடங்கு ஆரவாரம் கிளம்பிவிட்டது.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## கிளியும் சேவலும்



கிளி ஒரு வீட்டில் கூண்டில் அடைக்கப்பட்டிருந்தது. அங்கு வளர்க்கப்பட்டு வந்த சேவல் கிளியைப் பார்த்துக் கேட்டது "உன்னை ஏன் கூண்டில் அடைத்து வைத்திருக்கிறார்கள்"

கிளி கூறியது "என் உடலும் நிறமும் பட்டுப் போன்றதும் கவர்ச்சியாகவும் இருக்கிறதாம். பெண்களின் உதட்டுக்குப் பூசும் சாயத்தை விட என்னுடைய மூக்கின் நிறம் அவ்வளவு அழகாய் இருக்கிறதாம்.

அதுவும் அல்லாமல் அவர்கள் சொல்லிக் கொடுப்பதை நினைவில் வைத்து அப்படியே சொல்கிறேனாம். அதனால் வீட்டுப் பெண்கள் கூண்டில் என்னை அடைத்து வைத்து ரசிக்கிறார்கள்.

அதுசரி உனக்கு இங்கு என்ன வேலை. "விடியற் காலையில் குறிப்பிட்ட நேரத்தில் நான் கூவுகிறேன். வெளியில் செல்வதற்கோ, வீட்டு வேலை பார்ப்பதற்கோ அவர்கள் என் கூவல் சத்தம் கேட்டு எழுந்து விடுகிறார்களாம். அதற்காக என்னை வைத்திருக்கிறார்கள்" என்றது சேவல். "அதற்கு நீ தேவையில்லையே இப்பொழுது மணி அடிக்கும் கடிகாரம் இருக்கிறதே. அதற்குச் சாவி கொடுத்து விட்டால் குறிப்பிட்ட நேரத்தில் எழுப்பிவிட்டு விடுமே" என்றது கிளி.

"கடிகாரம் என்னைப் [illegible] குறிப்பிட்ட நேரத்தில் மணி அடித்து விடாதே. முன் பின்னாக இருக்குமே நான் அப்படியில்லையே" என்றது சேவல்.

கிளி கூண்டுக்குள்ளிருந்து தலையை வெளியே நீட்டியபடி "முட்டாள் சேவலே கடிகாரத்தில் எந்த நேரத்துக்கு எழவேண்டுமோ அந்த நேரத்துக்கு மணியடிக்க வைக்கலாமே. உன்னால் அப்படி முடியாதே" என்று கூறி ஏளனமாகச் சிரித்தது.

கோபம் கொண்ட சேவல் கிளியின் கண்ணைப் பார்த்து ஒரு கொத்துக் கொத்தி விட்டது. கண்ணிழந்த கிளி ரத்தம் கசிய கீச்... கீச்.. என்று கத்திக் கதறியது. "முட்டாளுக்குப் புத்தி சொல்லப் போய் ஒரு கண்ணை இழந்துவிட்டேன்" என்று வருந்தியது.

மா.பர்சூனி,
யா/சென்பத்திரிசியார் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈஸ்டர் தாக்குதல் துலங்காத மர்மம்

23ஆவது புலிகேசி படத்தைப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது. அந்தளவுக்கு அந்தப் படம் பிரபல்யம் பெற்றிருந்தது. அதில் ஒரு சம்பவம்.

வேற்று நாட்டுப் படைகள் போர் தொடுக்க வந்தபோது, மன்னன் 23ஆவது புலிகேசி (நடிகர் வடிவேலு) அந்தப் படைத் தளபதியின் காலில் விழுந்து ஒருமாதிரியாக போர் தொடுக்காமல் அந்த நாட்டுப் படைகளைத் திருப்பி அனுப்பி வைத்தார்.

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு நாட்களின் பின்னர், புலிகேசி மன்னனின் ஒற்றன் வருகிறான்.

மன்னா! நம் நாட்டுக்கு ஆபத்து வந்து விட்டது. எங்கள் நாட்டின் மீது வேற்று நாட்டுப் படைகள் போர் தொடுக்கவுள்ளன என்று கூறுகிறான்.

போர் தொடுக்க வந்த படையைத் திருப்பி அனுப்பி வைப்பதற்குப் பட்டாத பாடுபட்ட மன்னன் 23ஆவது புலிகேசிக்கு கடும் கோபம் வர, அவர் ஒற்றனை கடிந்துக் குதறுகிறார்.

இதன்போதுதான் ஒற்றன் கூறுகிறான்; நான் எனது சொந்த அலுவலைக் கடந்த நாட்களைக் கழித்து விட்டேன் மன்னா! என்று.

இதைக் கூறுவதற்குக் காரணம் இலங்கையில் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம் எங்கள் நாட்டின் புலனாய்வுத்துறை, பொலிஸ் திணைக்களம், இவையாவற்றுக்கும் மேலாக பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் என்றெல்லாம் இருந்தும் என்ன பயன்.

இதுவரையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார்? என்றோ அன்றி, அந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் எவர்? என்றோ இன்னமும் அறிக்கை வெளியிடப்படவில்லை.

மாறாக, ஒவ்வொரு தேர்தலின்போதும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பற்றிப் பேசப்படும்.

அதிலும் கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அரசியல் தலைவர்கள் சந்திக்கின்றபோதெல்லாம், அவர் அவர்களிடம் கேட்பது, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துங்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுங்கள் என்பதுதான்.

இருந்தும் இதுவரையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விவகாரம் மூடிமறைக்கப்பட்டு வருகிறது.

ஆம், ஈஸ்டர் குண்டுத் தாக்குலின் சூத்திரதாரிகள் மற்றும் அதன் பின்னணியில் இயங்கியவர்களை வெளிப்படுத்தினால், அதனூடு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தக் குற்றங்களும் விசாரணைக்கு முன்னெழும்.

இதன் காரணமாகவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கைகள் மறைக்கப்படுகின்றன.

ஆக, குற்றவாளிகளைக் காப்பாற்றுகின்ற எண்ணம் அரச தரப்பிடம் இருக்கும்போது நீதி நிலைநாட்டப்படுவது கடினமே.

### தபால்மூல வாக்களிப்பு தொடர்பில்

## அரச உத்தியோகத்தர்களுக்கான தெளிவு படுத்தல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தபால்மூல வாக்களிப்பு தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செயலமர்வு நேற்று பிப 03.15 மணிக்கு பிரதி அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது செல்லுபடியற்ற வாக்குகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகமாகக் காணப்பட்டது எனவும், ஆதலால் மாவட்ட ரீதியில் இவ் எண்ணிக்கையினை குறைக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதால்,

இவ் தெளிவூட்டலை சரியாகப் பெற்று ஒவ்வொருவரும் தான் சார்ந்த திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற சகல உத்தியோகத்தர்களையும் அழைத்து தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் பொது மக்களுக்கான வாக்களிப்புமுறைமை பற்றிய தெளிவுபடுத்தலானது பிரதேச செயலக ரீதியாக பிரதேச செயலர்களின் வழிகாட்டுதலில் உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாக கிராம அலுவலர் தலைமையில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் கிராமங்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவத்தாட்சி அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

வாக்களிப்பு முறைமை பற்றி உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் அவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் காணொளி மூலமும் காட்சிப்படுத்தி விளக்கமளிக்கப்பட்டது.

இச் செயலமர்வில் ஒவ்வொரு திணைக்களங்களிருந்தும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள். (ம-7,33)

## சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி 15 வயது ஆண் யானை மரணம்

### மன்னாரில் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரப்புக்கடந்தான் கிராமத்தில் சுமார் 15 வயது மதிக்கத்தக்க ஆண் யானை ஒன்று உயிரிழந்த நிலையில்நேற்று வெள்ளிக்கிழமை (25) காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த யானை அண்மைக்காலமாக பரப்புக் கடந்தான் பகுதியில் பல விவசாய நிலங்கள் மற்றும் விவசாயக் காணிகளில் சுற்றித்திரிந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த யானை நேற்று முன்தினம் (24) இரவு உயிரிழந்திருக்கலாம்என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யானை இறந்த இடத்திற்கு வருகை தந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த யானை சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு இறந்திருப்பதாக தெரிவித்தனர்.

இறப்பு சம்பவம் தொடர்பில் மன்னார் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,285)

### பாடசாலைக் கழிவறையை

## சுத்தம் செய்த 22 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

பலாங்கொடையில் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 22 மாணவிகள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (25) இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

சுகயீனமுற்ற மாணவிகள் நேற்று காலை இரசாயன பொருட்கள் சிலவற்றை பயன்படுத்தி பாடசாலையின் கழிவறையை சுத்தம் செய்துள்ளனர்.

பின்னர், சிறிது நேரம் கழித்து இந்த மாணவிகள் அனைவரும் திடீரென சுகவீனமடைந்துள்ளனர்.

இதனையடுத்து,சுகவீனமுற்ற மாணவிகள் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## ஆயுத உற்பத்தி நிலையம் மாத்தறையில் முற்றுகை

### மூன்று சந்தேக நபர்கள் கைது

மாத்தறையில் ஆயுத உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளதோடு மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது 63 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும், பின்னர் அகங்கமவில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பின் போது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, 9 mm துப்பாக்கியின் ஐந்து தோட்டாக்கள், ஒரு வெல்டிங் இயந்திரம் மற்றும் பல்வேறு உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர் இரண்டு துப்பாக்கிகளை விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளதனையடுத்து அவற்றினை கொள்வனவு செய்தவர்களை மாத்தறை பொலிஸார் கண்டுபிடித்து ஆயுதங்களுடன்கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 47 மற்றும் 54 வயதுடைய அஹங்கம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பொலிஸிலிருந்து தப்பி செல்ல முயன்றவர்

### தவறி விழுந்து உயிரிழப்பு

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, கச்சேரியகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரொருவர் கீழே தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாந்தோட்டை, வீரவில பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, கச்சேரியகம பிரதேசத்தில் இனங்காணாத நபர்கள் சிலர் புதையல் தோண்டுவதாக திஸ்ஸமஹாராம பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் புதையல் தோண்டிய சந்தேக நபர்களைக் கைது செய்ய முயன்ற போது சந்தேக நபர்கள் பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

இதன்போது, அங்கிருந்த சந்தேக நபரொருவர் கீழே தவறி வீழ்ந்து மயங்கியுள்ளார்.

பின்னர், பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் மயங்கிய சந்தேக நபரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த சந்தேக நபர் நீண்ட நாட்களாக சுகவீனமுற்று இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

## தொழிற்சங்கங்களுடன் உறவைப் பேணுவது அவசியம்

### அலி சப்ரி

தொழிற்சங்கங்களுடனான தமது உறவை அரசாங்கம்முறையாகக்கையாளாதுவிடின், அத் தொழிற்சங்கங்களால் வழங்கப்படும் அழுத்தம் பொருளாதார மறுசீரமைப்புக்களையும், வளர்ச்சியையும் அடைவதற்கு மிகமுக்கிய தடையாக மாறக்கூடும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் அலிசப்ரி, தற்போதைய அரசாங்கம் எதிரணியில் இருந்தபோது தொழிற்சங்கங்களின் ஆதரவினால் பெரும் பயனடைந்திருக்கிறது. இருப்பினும் தற்போது அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது இந்தத் தொடர்பை மீள்வடிவமைத்து, உரியவாறு கையாளவேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டிருக்கிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

14

இதேபோல் மற்றைய மாகாணங்களின் தொகுதிகளின் வாக்குப் பலத்தை ஒப்பிடும்போது பல வேறுபாடுகளை காணக்கூடியதாக வுள்ளது.

1947ஆம் ஆண்டுத் தேர்தலில் மேல் மாகாணத்தில் 43 556 வாக்காளருக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையிலும் வட மத்திய மாகாணத்தில் 11 505 வாக்காளருக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையிலும் இருந்ததைக் காணக்கூடியதாக உள்ளது.

மாகாண ரீதியாக 1947ஆம் ஆண்டுத் தேர்தல் முதல் 1977ஆம் ஆண்டுத்தேர்தல் வரை வாக்குப்பலம் எவ்வாறு இருந்தது என்பதை அட்டவணை-6 காட்டுகிறது.

அட்டவணை-6 மாகாண ரீதியாக வாக்குப்பலம் (ஒரு உறுப்பினருக்கு வாக்காளர் எண்ணிக்கை)

| மாகாணம் | 1947 | 1952 | 1956 | 1960மார்ச் 1960யூலை | 1965 | 1970 | 1977 |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 43556 | 45800 | 52414 | 31162 | 40606 | 47737 | 50215 |
| மத்திய | 32837 | 25701 | 39953 | 18227 | 23705 | 27779 | 32597 |
| தென் | 51289 | 49260 | 56444 | 31426 | 38502 | 43239 | 46291 |
| வடக்கு | 31171 | 29674 | 32318 | 24503 | 29484 | 32265 | 35227 |
| கிழக்கு | 21112 | 20708 | 24779 | 18161 | 24224 | 28321 | 32099 |
| வடமேல் | 31681 | 35143 | 41270 | 26826 | 33328 | 38954 | 42297 |
| வட மத்திய | 11505 | 15292 | 20855 | 15419 | 19754 | 26540 | 28849 |
| ஊவா | 17492 | 15241 | 19092 | 14273 | 18959 | 23682 | 25280 |
| சப்பிரகமுவ | 31244 | 30149 | 34711 | 23423 | 30146 | 34650 | 39698 |
| உறுப்பினர் எண்ணிக்கை | 95 | 95 | 95 | 151 | 151 | 151 | 168 |

சுதந்திரத்திற்குப் பின் நடந்த 8 பாராளுமன்றத் தேர்தல்களிலும் கட்சிகள் பெற்ற ஆசனங்களை அட்டவணை 7 காட்டுகிறது.

அட்டவணை 7

| தேர்தல் ஆண்டுகள் | 1948 | 1952 | 1956 | 1960 மார்ச் | 1960 யூலை | 1965 | 1970 | 1977 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட்சியின் பெயர்கள் | பெறப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை | | | | | | | |
| ஐக்கிய தேசிய கட்சி | 42 | 54 | 8 | 50 | 30 | 66 | 17 | 140 |
| சிறீலங்காசுதந்திரக்கட்சி | - | 9 | - | 46 | 75 | 41 | 91 | 8 |
| பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சி | 5 | - | - | - | - | - | - | - |
| இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி | 7 | 4 | 1 | 1 | - | 3 | 3 | - |
| இலங்கை இந்தியா காங்கிரஸ் கட்சி | 6 | - | - | - | - | - | - | - |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 3 | 1 | 3 | 3 | 4 | 4 | 6 | - |
| லங்கா சமசமாஜகட்சி | 10 | - | 14 | 10 | 12 | 10 | 19 | - |
| விப்லவக்காரி லங்கா சமசமாஜக்கட்சி | - | 3 | - | - | - | - | - | - |
| தொழிற்கட்சி | 1 | 1 | - | - | - | - | - | - |
| போதிசத்துவபண்டாரநாயக்கமுன்னணி | - | - | - | 1 | - | - | - | - |
| இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் | - | - | - | - | - | - | - | 1 |
| இலங்கைத்தமிழரசுக்கட்சி | - | 2 | 10 | 15 | 16 | 14 | 13 | - |
| தேசியவிடுதலைமுன்னணி(JVP) | - | - | - | 2 | 2 | 1 | - | - |
| லங்காஜனநாயகக்கட்சி | - | - | - | 4 | 2 | 5 | - | - |
| ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | - | - | 51 | - | - | - | - | - |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | - | - | - | 10 | 3 | 1 | - | - |
| புதிய (நவ) லங்காசமசமாஜகட்சி | - | 9 | - | - | - | - | - | - |
| சோசலிசமக்கள்முன்னணி | - | - | - | 1 | - | - | - | - |
| இலங்கைதேசியமுன்னணி | - | - | - | 1 | - | - | - | - |
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) | - | - | - | - | - | - | - | 18 |
| சுயேட்சை | 21 | 11 | 8 | 7 | 7 | 6 | 2 | 1 |
| குடியரசுக் கட்சி | - | 1 | - | - | - | - | - | - |
| மொத்தம் | 95 | 95 | 95 | 151 | 151 | 151 | 151 | 168 |

### 1978இன் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு

1978 செப்ரெம்பர் 7 ஆம் திகதி தேசிய அரசுப் பேரவை முதலாம் குடியரசு அரசியலமைப்புக்கு பதிலாக இரண்டாம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பொன்றை அறிமுகப்படுத்தியது.

இன்றுவரை அது 22 முறை திருத்தியமைக்கப்பட்டது. அது 1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்புக்கு பதிலாக பதிலீடு செய்யப்பட்டதோடு, பிரித்தானிய பொதுநலவாய சபைக்குள் டொமினியன் நாடொன்றாக சுய நிர்ணய ஆட்சிமுறைகிடைக்கப் பெற்றதன் பின்னர் உருவான மூன்றாவது அரசியலமைப்பாக விளங்கியது.

புதிய அரசியலமைப்பினால் ஒரு தனியான சட்டவாக்கத் துறையும் ஒரு நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியும் அறிமுகம் செய்யப்பட்டன. புதிய அரசியலமைப்பினால் பாராளுமன்றத் தேர்தலின் மூலம் தேர்தல் மாவட்டங்களிலிருந்து விகிதாசார பிரதிநிதித்துவமுறையின் கீழ் நியமனம் செய்யப்படுகின்ற 196 உறுப்பினர்களுடன் கூடிய பாராளுமன்றமொன்று உருவாகியது.

14 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 வரை அதிகரிக்கப்பட்டது. இவ்வரசியலமைப்பினால் சுயாதீனமான நீதிமன்றமும் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) ஒருவரும் தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள மற்றும் சிற் சில வரைபுகள் தொடர்பாக மக்கள் தீர்ப்பை நடாத்துதலும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

1988 ஆம் ஆண்டு நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தினூடாக பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் அற்றுப் போயிருந்த தோட்டப் பிரதேசங்களிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த இந்திய வம்சாவளியினர்களான தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டமை இலங்கை தேர்தல் வரலாற்றில் ஒரு முக்கியமான மைல் கல்லாகும். இவை பற்றி விரிவாக பகுதி II இல் பார்ப்போம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டுத் தாக்கு...

வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்திற்கு வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என நீதவான் பெயரில் பதிவுத் தபாலில் கடிதம் ஒன்று கிடைத்துள்ளதுடன் அந்தக் கடிதம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

நேற்று மற்றும் 28ஆம் திகதிகளில் நீதவான் நீதிமன்றத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## பருத்தித்துறை...

(வயது-26) என்ற இளம் குடும்பஸ்தரே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தருக்கு கடந்த 22ஆம் திகதி உடல் சுகவீனம் ஏற்பட்ட நிலையில், உறவினர்கள் அவரை மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பின்னர் அன்றைய தினமே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

இந்நிலையில் கணவனின் பிரிவை தாங்கமுடியாமல் மனைவி தவறான முடிவெடுத்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

## மின்சாரம்...

துசிகரன் (வயது-34) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் சுகவீனமுற்ற நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை ஒரு மணியளவில் உயிரிழந்துள்ளார். (ம-7,60)

## மின்சாரம் தாக்கி...

பாராளுமன்றத் தேர்தலுக்கான சுவரொட்டியை ஒட்டிக்கொண்டிருந்த போது இவ்விபரீதம் இடம்பெற்றுள்ளது.

இதில் முத்துவிநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த காசிலிங்கம் தங்கதீபன் (வயது-45) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

யானையிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக அனுமதி பெற்று அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டே குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். (ம-7,299)

## தமிழர்களின்...

விற்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பணியாற்றிய கடந்த காலப் பகுதியில், அடையாளம் கண்டு சிபார்சு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை தொடர்வது மற்றும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த திட்டங்களை ஆரம்பிப்பது வேண்டியவற்றுள், முன்னுரிமைப்படுத்தப்பட்ட 38 விடயங்கள் தொடர்பாக நேற்று டக்ளஸ் தேவானந்தாவால் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் உள்ளிட்ட குறித்த விடயங்கள், ஜனாதிபதியினால் சாதகமாக பரிசீலிக்கப்பட்ட நிலையில், சந்திப்பு சுமூகமாக நிறைவடைந்தது. (ம-7,33)

## வடக்கில் மழை...

அத்தோடு எதிர்வரும் 06.11.2024 அல்லது 07.11.2024 மீண்டும் ஒரு தாழமுக்கம் வங்காள விரிகுடாவில் உருவாகும் வாய்ப்புள்ளது. (இது ஒரு நீண்ட கால வானிலை முன்னறிவிப்பு. இதில் மாற்றங்கள் நிகழலாம் என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்) அத்தோடு நவம்பர் மாதத்தில் 3 தாழமுக்க நிகழ்வுகள் தோன்றும் வாய்ப்புள்ளது. நான் ஏலவே குறிப் பிட்டது போன்று, நவம்பர் மாதத்தின் 18 நாட்கள் மழை நாட்களாக அமையக்கூடும் என்றார். (ம-7,33)

## தாக்குதல்...

தகவல் வெளியானாலும் இஸ்ரேலியரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டுள்ளதாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தாக்குதல் திட்டத்தின் இலக்கு இஸ்ரேலியர் அல்லாத வெளிநாட்டவர்களோ, இலங்கையர்களோ அல்லது வேறு எந்த நாசகார செயலும் அல்ல என தகவல் வெளியாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது, தாக்குதல் திட்டம் தொடர்பில் மூன்று இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்காக பொலிஸார் தடுப்புக் காவல் உத்தரவை பெற்றுள்ளனர்.

அடுத்தடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். அந்தக் கைதுகள் மூலம்தான் இது தொடர்பாகக் கூடுதல் பாதுகாப்பை ஈடுபடுத்த வேண்டும் என்பது தெரிய வந்தது என்றார். (ம-7)

## யாழில்...

பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/157 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/278 கிராம சேவகர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச்சேர்ந்த 8 பேரும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/410 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் ஜே/417 கிராம சேவகர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும், ஜே/393 கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் ஜே/413 கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 7பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,33)

## அரிசி...

விவசாய மற்றும் வர்த்தக அமைச்சுகள்மற்றும்நெல் சந்தைப்படுத்தல்சபையின்அதிகாரிகள்குழுவைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித் தார்

அத்துடன் அரிசி விலை மற்றும் அது தொடர்பான தற்போதைய நிலைவரங்கள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பில் மேற் கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். (ம-7)

## பாதுகாப்பான...

ஐரோப்பிய ஒன்றிய (EU) பிரதிநிதிகள் குழு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்தது.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விளக்கமளித்ததுடன், சுற்றுலாப் பயணிகள் மற்றும் இலங்கை மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் தெரிவித்தார்.

முக்கிய சுற்றுலாப் பகுதிகளில் பாதுகாப்பு நெறிமுறைகளுடன் கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவசர சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 5636
K 6 1 7 0 9 0
அத சம்பத
K 7 0 9 0
சீட்டிழுப்பு இலக்கம் 211

தன நிதானய
திகதி - 2024.10.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1666
S 19 26 63 75 S
096039

மெகா பவர்
திகதி 25/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1984
F 09 08 17 56 79
146216

லக்கி 7 VIP
திகதி 2024.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 0462
X 7 2 6 8 9 8 X

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3878
சீட்டிழுப்பு திகதி 25.10.2024
K 03 11 30 62
K 082555

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 945
தனுசு 07 10 27 49 தனுசு
084306 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.10.2024 வெற்றி வாரம் 344 வர்ணம் இள இளஞ்சிவப்பு
ஆங்கில எழுத்து M
மற்றும் வெற்றி இலக்கம் 9 8 5 0 2 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,399,136.00
43057
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2610 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 25.10.2024 தினம் வெள்ளி
34 52 65 69 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,975,725.60

சனிதா
திகதி 2024.10.25 வெற்றி வாரம் 4771
06 11 55 67 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,175,014.40
ரூ.100,000/- 11633

சசிரி
வெற்றி வாரம் 545
சீட்டிழுப்பு திகதி 2024.10.25
பச்சை
வெற்றி இலக்கங்கள் 18 35 50
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,745,960/-

சீட்டிழுப்பு வாரம் 4322 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.10.25 தினம் வெள்ளிக்கிழமை
16 23 44 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,478,843.20
141817

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 39 03 21 34 57
1786
இள கபில
25.10.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 552,447,415.00

ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2436
சீட்டிழுப்பு திகதி : 2024.10.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,170,741.60
13 33 35 72 X
372966


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானம் பயணச் சீட்டுக்கள்
35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(480)

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை



சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1400/= France 2300/= Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**TCN Express**
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
T.P - 077 755 4528
(481)

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.
தொடர்புகளுக்கு :
**076 834 6136**
(2400)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- உரும்பிராய் மருதனார்மடம் செல்லும் காப்பெற் வீதி 150 மீற்றர் தூரம்.
- நல்ல சூழல் குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- தரகர் தேவையில்லை.

**077 468 3354, 077 288 0152**
(2403)

## பெண் வேலையாள் தேவை

கோப்பாயில் இயங்கும் அழகுக்கலை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.
**தகைமை** - அழகுக் கலையில் NVQ 3/ NVQ4/ Diploma
தொடர்புகளுக்கு :
**077 440 7439, 077 795 6108**
(2388)

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா?
கவலை வேண்டாம்
ரூபாய் 9999/= மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கி கொள்ளுங்கள் சென்ற முறை தவற விட்டவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்
உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.
முன்பதிவுக்கு இன்றே அழையுங்கள்.
விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே!
(477)
**077 434 6245**

## லைடன் புடவை நிலையம் யாழ்ப்பாணம்



எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்

தீபாவளியை முன்னிட்டு எதிர்வரும் 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று எமது வியாபார நிலையம் திறக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

10% 12.10.2024 - 30.10.2024
**Leyden Textile Center**
410, Hospital Road, Jaffna.
021 222 2381
(C-1453)

## கார் வாடகைக்கு



Aarathana Tours & Travels (Pvt) Ltd
Alto கார்கள் வாடகைக்கு உண்டு.
(476)
**077 332 2433**
Chulipuram jaffna

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் சில நாட்களே உள்ளன
### அமெரிக்க அதிஸ்ட விசா
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L
55000 இலவச விசாக்கள்
0768226244
V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | கிளிநொச்சி 0768226249 | [illegible] 0768226243 | [illegible] 0777068777 | [illegible] 0777720322 | [illegible] 0764550675 |
| சாவகச்சேரி 0768226242 | மானிப்பாய் 0768226238 | சங்கானை 0777726322 | கோப்பாய் 0764550674 | [illegible] 0764550670 | பண்டத்தரிப்பு 0777718322 |
| புத்தூர் 0764550671 | நெல்லியடி 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

**திகதி : 28.10.2024 (திங்கட்கிழமை)**
**நேரம் : காலை 09.00 மணி**
**இடம் : முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் (கச்சேரி)**

ஜோன் கீல்ஸ் (JOHN KEELS) குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஷின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகள் மற்றும் தொழில் தேடுவோருக்கான மாபெரும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு தேர்ச்சி பெற்ற வளவாளர்களால் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் (கச்சேரி) நடாத்தப்படவுள்ளது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் வரவினை எதிர்வரும் 27.10.2024 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் பதிவுசெய்து கொள்ளுங்கள்.
தொலைபேசி இலக்கம் : **074 030 5682**

பங்கு பற்றும் அனைவருக்கும் பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்

**அனுமதி இலவசம்**
(2394)


## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | -236/= |
| 1Kg சிவப்பு பருப்பு | -277/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | -385/= |
| 1Kg Prima கோதுமை மா | -159/= |
| 1Kg நவை | -284/= |
| 1Kg உளுத்தம் பருப்பு | -780/= |
| 1Kg மல்லி | -380/= |
| 1Kg பயறு | -655/= |
| 1Kg சோயா | -440/= |
| 10Kg விஜிதா குத்தரிசி | -2530/= |
| 750 ml நல்லெண்ணை | -1460/= 1550/= |
| 400g சஸ்ரயன் | -3525/= 3900/= |
| 180 ml Chik சம்போ | -420/= 480/= |
| 1Kg சன்லைட் றோஸ் பவுடர் | -320/= 380/= |
| 01 Ocean மீன் ரின் | -390/= 500/= |

400g Anchor
1000/=



1050/=

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்
(480)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை.
கிளிநொச்சியில் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு உணவு தங்குமிடம் வழங்கப்படும்.

- **விற்பனை பிரிதிநிதி** : கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்(ஆண்)
- **அலுவலக முகாமையாளர்** : கணனி அறிவுடையவர்கள்(ஆண், பெண்)
- **விற்பனையாளர்கள்** : ஆண், பெண்
- **கணக்குப்பதிவாளர்** : ஆண், பெண் (கணனி அறிவுடையவர்கள்)

மேற் குறிப்பிட்ட பணிகளுக்கு தகுதி வாய்ந்தவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களிடம் உள்ள தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

1. சுயவிபரக் கோவை
2. குடும்ப பங்கீட்டு அட்டை
3. பிறப்புச் சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டை
5. G.S குணநல சான்றிதழ்

தொடர்புகளுக்கு :
**077 743 5265**
(C-1454)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.